



**TNPSC GROUP - II & IIA Prelims - Answer Explanation**

**பொதுத் தமிழ்**

**திருப்புதல் தேர்வு: இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும்**

**55-41/30-20/50-22/25-11/44-16**

**1. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

**பொருள்:**

ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும்.

**2. விடை: D**

**3. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பொறையுடைமை

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்.

**பொருள்:**

நிறை உடையவனாக இருக்கும் தன்மை தன்னை விட்டு நீங்காமல் இருக்க வேண்டினால், பொறுமையைப் போற்றி ஒழுக வேண்டும்.

**4. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்வி

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

**பொருள்:**

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும், அதுபோல் மக்களின் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

**5. விடை: D**

**விளக்கம்:**

**வியங்கோள் வினைமுற்று**

- வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும்.
- இவ்வினைமுற்று இரு திணைகளையும் (உயர்திணை, அஃறிணை) ஐந்து பால்களையும் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால்) மூன்று இடங்களையும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) காட்டும்.
- இதன் விகுதிகள் க, இய, இயர், அல் என வரும்.
  (எ.கா.) விடல் - 'அல்' விகுதி

**6. விடை: B**

**7. விடை: B**

**விளக்கம்:**

டி.கே.சி வாழ்ந்த காலம் 1881 முதல் 1954 வரை.

**8. விடை: B**

**விளக்கம்:**

உலகின் முதல் மாந்தன் தமிழன்: தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டமே என்பதும், மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் பழந்தமிழர் நாகரிகமே என்பதும், பாவாணரது ஆய்வுப் புலத்தின் இரு கண்களாகும்.

**9. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஊக்கமுடைமை

உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று.

**பொருள்:**

ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும், ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ.

**10. விடை: A**

**விளக்கம்:**

- நாமக்கல் கவிஞரின் காலம் 19.10.1888 முதல் 24.8.1972 வரை.
- நாமக்கல் கவிஞருடைய பாடல்கள் 1998-ஆம் ஆண்டு நாட்டுடமை ஆக்கப்பட்டன.

11. **விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** விருந்தோம்பல்

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

**பொருள்:**

வந்த விருந்தினரைப் போற்றி, இனிவரும் விருந்தினரை எதிர் பார்த்திருப்பவன், வானுலகத்தில் உள்ள தேவர்க்கும் நல்ல விருந்தினனாவான்.

12. **விடை: D**

**விளக்கம்:**

- வீரமாமுனிவர் தேடிக் கண்டறிந்த சுவடிகளில் காண அரிதான பல பொக்கிசங்கள் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.
- தமிழ் இலக்கிய இலக்கணங்கள் கவிதை வடிவில் இருந்து வந்தன.
- அவற்றை மக்கள் எளிதில் படித்தறிய முடியவில்லை என்பதனை உணர்ந்து உரைநடையாக மாற்றியவர் இவர்.

13. **விடை: C**

14. **விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அறன் வலியுறுத்தல்

சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

**பொருள்:**

அறம் சிறப்பையும் அளிக்கும்: செல்வத்தையும் அளிக்கும்: ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தை விட நன்மையானது வேறு யாது?

15. **விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஈகை

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

**பொருள்:**

பொருளின் குறைபாட்டை நிரப்புவதற்காக உள்ளதைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தமியராய் உண்பது வறுமையால் இறப்பதை விடத் துன்பமானது.

16. **விடை: B**

**விளக்கம்:** மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை.

**17. விடை: C**

**விளக்கம்:**

- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை (அக்டோபர் 19, 1888 - ஆகஸ்ட் 24, 1972) என்பவர் தமிழறிஞரும் கவிஞரும் ஆவார்.
- கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது போன்ற தேசபக்திப் பாடல்களைப் பாடிய இவர் தேசியத்தையும், காந்தியத்தையும் போற்றியவர்.

**18. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பெரியாரைத் துணைக்கோடல்

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

**பொருள்:**

அறம் உணர்ந்தவராய்த் தன்னை விட மூத்தவராய் உள்ள அறிவுடையவரின் நட்பை, கொள்ளும் வகை அறிந்து ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

**19. விடை: B**

**விளக்கம்:**

- காந்தியக் கவிஞர் என்பது கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை (நாமக்கல் கவிஞர்)க்கு வழங்கப்பட்ட ஒரு சிறப்புப் பெயர்.
- இவர் தேசியத்தையும், காந்தியத்தையும் போற்றியவர் என்பதால் இவருக்கு இந்தப் பெயர் வழங்கப்பட்டது.

VETRII I.A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011

**20. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** வினைசெயல் வகை

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

**பொருள்:**

வலிமை குறைந்தவர், தம்மைச் சார்ந்துள்ளவர் நடுங்குவதற்காக தாம் அஞ்சி, வேண்டியது கிடைக்ககுமானால் வலிமைமிக்கவரைப் பணிந்தும் ஏற்றுக் கொள்வர்.

**21. விடை: C**

**விளக்கம்:**

- இன்ப இலக்கியம் இந்நூலின் ஆசிரியர் வாணிதாசன்.
- பிரார்த்தனை, தேமதுரத் தமிழோசை, இலக்கிய இன்பம் ஆகிய நூல்கள் வெ. இராமலிங்கனார் இயற்றினார்.

**22. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அவையஞ்சாமை

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

**பொருள்:**

சொற்களின் தூய்மை அறிந்தோர், அவைக்களத்தின் வகையினை அறிந்து, அவையில் வாய் சோர்ந்து பிழை சொல்லமாட்டார்.

**23. விடை: C**

**விளக்கம்:**

- ஹீராஸ் பாதிரியார்- சிந்து சமவெளி மொழியைத் தமிழ் என்றோ, பழைய திராவிட மொழி என்றோ கூறக் கூடாது.
- திராவிட மொழிகளை ஒரு குடும்ப மொழி என்னும் அடிப்படையில் ஒப்பிட்டு ஆராய்ந்த 'கால்டுவெல்' அவற்றிற்கிடையே அமைப்பிலும், பொருளிலும் வடிவிலும் காணப்படும் ஒற்றுமைகளை விளக்கித் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற ஆய்வு நூலை எழுதினார்.

**24. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கண்ணோட்டம்

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

**பொருள்:**

எவராலும் விரும்பத்தக்க நாகரிகமான கண்ணோட்டத்தை விரும்புகின்றவர், பழகியவர் தமக்கு நஞ்சு இடக்கண்டும் அதை உண்டு அமைவர்.

**25. விடை: B**

**விளக்கம்:**

"கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே" - வெ. இராமலிங்கனார்

**பொருள்:**

கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.

VETRII IAS STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**26. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அன்புடைமை

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

**பொருள்:** அன்புக்கும் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே (உள்ளே இருக்கும் அன்பைப்) பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்

**27. விடை: D**

**28. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்வி

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

**பொருள்:**

அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. ஒருவருக்கு அதனைவிடச் சிறந்த செல்வம் வேறு இல்லை.

**29. விடை: A**

**விளக்கம்:**

- என் கதை - தன் வரலாற்று நூல்
- இலக்கிய இன்பம் - கட்டுரை

**30. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நடுவுநிலைமை

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்ப படும்.

**பொருள்:** நடுவுநிலைமை உடையவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்பது அவரவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் காணப்படும்.

**31. விடை: B**

**32. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கூடா ஒழுக்கம்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

**பொருள்:** உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டு விட்டால் மொட்டை அடித்தலும் சடை வளர்த்தலுமாகிய புறக்கோலங்கள் வேண்டா.

**33. விடை: D**

**34. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்லாமை

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய

நூலின்றிக் கோட்டி கொளல்

**பொருள்:** அறிவு நிரம்புவதற்குக் காரணமானக் நூல்களைக் கற்காமல் கற்றவரிடம் சென்று பேசதல், சூதாடும் அரங்கு இழைக்காமல் வட்டுக்காயை உருட்டிஆடினார் போன்றது.

**35. விடை: C**

**36. விடை: C**

**விளக்கம்:**

| | |
|---|---|
| மக்கள் கவிஞர் | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் |
| தேசியக் கவிஞர், மகாகவி | பாரதியார் |
| காந்தியக் கவிஞர் | நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை |
| புரட்சிக் கவிஞர் | பாரதிதாசன் |

**37. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பண்புடைமை

உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க

பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு

**பொருள்:** உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புமை அன்று, பொருந்தத்தக்கப் பண்பால் ஒத்திருத்தலே கொள்ளத்தக்க ஒப்புமையாகும்.

**38. விடை: B**

**39. விடை: D**

**40. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நட்பு ஆராய்தல்

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்

ஒருவுக ஒப்பிலார் நட்பு.

**பொருள்:** குற்றமற்றவருடைய நட்பைக் கொள்ள வேண்டும், ஒத்தபண்பை இல்லாதவருடைய நட்பை ஒன்றைக் கொடுத்தாவது கைவிட வேண்டும்.

- மருவுக - கொள்க
- ஒருவுக - விடுக
- மருவுக × ஒருவுக

41. **விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** புறங்கூறாமை

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

**பொருள்:** மற்றவனைப் பற்றிப் புறங்கூறுகின்றவன், அவனுடைய பழிகள் பலவற்றிலும் நோகத்தக்கவைகளை ஆராய்ந்து கூறிப் பிறரால் பழிக்கப்படுவான்.

42. **விடை: A**

43. **விடை: B**

**விளக்கம்:**

**இலக்கணக்குறிப்பு**

- இன்ப சொரூபம் - உருவகம்.
- அன்பும் ஆர்வமும் அடக்கமும் - எண்ணும்மை

44. **விடை: B**

**விளக்கம்:**

- தாராபாரதியின் இயற்பெயர் ராதாகிருஷ்ணன்
- தாராபாரதியின் பெற்றோர் - துரைசாமி மற்றும் புஷ்பம் அம்மாள்
- தாராபாரதி பிறந்த இடம் - வந்தவாசியை அடுத்த குவளை, திருவண்ணாமலை மாவட்டம்

45. **விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஒழுக்கமுடைமை

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

**பொருள்:** நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்க்கைக்குக் காரணமாக இருக்கும்; தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும்.

46. **விடை: C**

47. **விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பொறையுடைமை

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

**பொருள்:**

வரம்பு கடந்து பிறர் செய்யும் தீங்கை எப்போதும் பொறுக்க வேண்டும்; அத் தீங்கை நினைவிலும் கொள்ளாமல் மறந்து விடுதல் பொறுத்தலை விட நல்லது.

**48. விடை: D**

**விளக்கம்:**

- வீரமங்கை இராணி வேலுநாச்சியார் பதினெட்டாம் நூற்றாண்டில் சிவகங்கைப் பகுதியின் அரசி ஆவார்.
- பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடினார்.
- இவரே இந்தியாவில் விடுதலைக்காகப் போராடிய முதல் அரசி ஆவார்.

**49. விடை: C**

**50. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஊக்கமுடைமை

உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃ தில்லார்
மரம்மக்க ளாதலே வேறு.

**பொருள்:**

ஒருவனுக்கு வலிமையானது ஊக்க மிகுதியே, அவ்வூக்கம் இல்லாதவர் மரங்களே, (வடிவால்) மக்களைப் போல் இருத்தலே வேறுபாடு.

**51. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

**பொருள்:** வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும்

**52. விடை: A**

**விளக்கம்:** கவியரசு கண்ணதாசன் தமிழ்ச்சங்கம் சார்பில் கண்ணதாசன் விருதைப் பெற்ற முதல் கவிஞர் வாலி.

**53. விடை: B**

**விளக்கம்:** முடியரசனின் கவிதைகளைச் சாகித்திய அகாதெமி இந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது.

**54. விடை: A**

**55. விடை: C**

**விளக்கம்:**

"பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"
- சிலப்பதிகாரம்

**56. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அறன் வலியுறுத்தல்

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

**பொருள்:** பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் பேசுதல் ஆகிய நான்கும் இல்லாமல் வாழ்வதே அறம் ஆகும்.

**57. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஈகை

வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து

**பொருள்:** வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது.

**58. விடை: B**

**59. விடை: B**

**விளக்கம்:** கி.வா.ஜகந்நாதன் தமிழறிஞர் உ.வே சாமிநாதய்யரின் மாணாக்கராவார்.

**60. விடை: A**

**61. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பெரியாரைத் துணைக்கோடல்

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

**பொருள்:** நல்லவராகிய பெரியாரின் தொடர்பைக் கைவிடுதல் பலருடைய பகையைத் தேடிக்கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமை உடையதாகும்.

**62. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** வினைசெயல் வகை

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

**பொருள்:** காலந்தாழ்த்தி செய்யத் தக்கவற்றைக் காலந்தாழ்ந்தே செய்ய வேண்டும், காலந்தாழ்த்தாமல் விரைந்து செய்யவேண்டிய செயல்களைச் செய்ய காலந்தாழ்த்தக் கூடாது.

**63. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அவை அஞ்சாமை

கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
நல்லா ரவையஞ்சு வார்.

**பொருள்:** நூல்களைக் கற்றிந்த போதிலும் நல்ல அறிஞரின் அவைக்கு அஞ்சுகின்றவர், கல்லாதவரை விடக் கடைப்பட்டவர் என்று கூறுவர்.

**64. விடை: D**

**விளக்கம்:**

- மீட்சி - விடுதலை
- நவை - குற்றம்
- படிகம் - பளபளப்பான கல்
- படி - உலகம்

**65. விடை: B**

**விளக்கம்:**

- 'மக்கள் சிந்தனை' இதழின் ஆசிரியர் குன்றக்குடி அடிகளார்.
- 'சனயுகம்' இதழின் ஆசிரியர் தமிழ் ஒளி

**66. விடை: B**

**67. விடை: D**

**விளக்கம்:**

**உருவக அணி**

உவமை (ஒப்பாகக் காட்டப்படும் பொருள்) மற்றும் உவமேயத்தினை (உவமிக்கப்படும் பொருள்) வேறுபடுத்தாமல் இரண்டும் ஒன்று எனக் கூறப்படுவது உருவக அணி என அழைக்கப்படுகிறது.

**அதிகாரம்:** கண்ணோட்டம்

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.

**பொருள்:** கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற மிகச் சிறந்த பெண்ணால் தான், இந்த உலகம் அழியாமல் இருக்கின்றது

**68. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அன்புடைமை

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.

**பொருள்:** உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு உடம்பின் புறத்து உறுப்புக்கள் எல்லாம் என்ன பயன் செய்யும்.

**69. விடை: C**

**70. விடை: C**

**விளக்கம்:**

- வேலு நாச்சியார் சிவகங்கைக் கோட்டையை 1780-ல் மீண்டும் கைப்பற்றினார்.
- வேலு நாச்சியார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போரிட்டு தனது ராஜ்யத்தை வெற்றிகரமாக மீட்டெடுத்தார்.
- வேலு நாச்சியார் பத்து ஆண்டுகள் ஆட்சி செய்து 1796 இல் காலமானார்.

**71. விடை: B**

**72. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்வி

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

**பொருள்:**

எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

**73. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நடுவுநிலைமை

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி

**பொருள்:**

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

**74. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கூடா ஒழுக்கம்

தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

**பொருள்:**

தவக்கோலத்தில் மறைந்து கொண்டு தவம் அல்லாத தீயச்செயல்களைச் செய்தல், புதரில் மறைந்து கொண்டு வேடன் பறவைகளை வலைவீசிப் பிடித்தலைப் போன்றது.

**75. விடை: D**

**76. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்லாமை

மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

**பொருள்:** கல்லாதவர் உயர்ந்த குடியில் பிறந்தவராக இருப்பினும் தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும் கல்விக் கற்றவரைப் போன்ற பெருமை இல்லாதவரே

**77. விடை: A**

**78. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** செங்கோன்மை

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி.

**பொருள்:** உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நம்பி வாழ்கின்றன, அதுபோல் குடிமக்கள் எல்லாம் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றனர்.

**79. விடை: D**

**80. விடை: B**

**விளக்கம்:**

- "என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினளாம் எங்கள் தாய்!" - பாரதியார்
- "தீங்கு நேர்ந்திடில் தமிழர்க்கே – இந்தத் தேகம் இருந்தொரு லாபமுண்டோ?"- பாவேந்தர்
- "எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித் தலைமுறைகள் பல கழித்தோம்; குறை களைந்தோமில்லை தகத் தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!" - பாவேந்தர்

**81. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பண்புடைமை

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.

**பொருள்:** மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர் அரம் போல் கூர்மையான அறிவுடையவரானாலும், ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர்.

VETRI I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

82. **விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நட்பு ஆராய்தல்

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

**பொருள்:** நட்புச் செய்தபிறகு நட்பை உடையவர்க்கு அதிலிருந்து விடுதலை இல்லை, ஆகையால் ஆராயாமல் நட்புச் செய்வது போல் கெடுதியானது வேறு இல்லை.

83. **விடை: B**

84. **விடை: B**

85. **விடை: B**

**விளக்கம்:** கி.வா.ஜகந்நாதன் எழுதிய ‘வீரர் உலகம்' என்ற நூலிற்கு 1967-ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.

86. **விடை: C**

**விளக்கம்:**

- பராக்கிரமம் - வீரம்
- உன்னதம் - உயர்வு
- இமமலை - இமயமலை
- கீர்த்தி - புகழ்

87. **விடை: C**

**விளக்கம்:**

- தாராபாரதி பாரதிதாசனைப் போன்று தேசிய உணர்வும், சமூக விழிப்புணர்வையும் கொண்ட கவிதைகளை எழுதியுள்ளார்.
- “புதிய விடியல்கள்”, “இது எங்கள் கிழக்கு”, “விவசாயம் இனி இவர் வேதம்”, “பூமியைத் திறக்கும் பொன்சாவி” போன்ற நூல்கள் அவரது படைப்புகள் ஆகும்.

88. **விடை: B**

**விளக்கம்:**

இயல்பாக நடக்கும் ஒரு நிகழ்வின் மீது, கவிஞர் தன் கற்பனையான குறிப்பை (கருத்தை) ஏற்றிப் பாடுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**அதிகாரம்:** புறங்கூறாமை

அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

**பொருள்:** ஒருவர் நேரில் இல்லாதது கண்டு பழிச்சொல் கூறுவோனுடைய உடல் பாரத்தை, இவனையும் சுமப்பதே எனக்கு அறம் என்று கருதி நிலம் சுமக்கின்றதோ?

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**89. விடை: C**

**90. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அருளுடைமை

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்

பூரியார் கண்ணும் உள.

**பொருள்:**

பொருள்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன; (உயர்ந்தவரிடத்தில் மட்டுமே உள்ள) அருளாகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வமாகும்.

**91. விடை: C**

**92. விடை: B**

**93. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பொறையுடைமை

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்

பொன்றுந் துணையும் புகழ்.

**பொருள்:**

தீங்கு செய்தவரைப் பொறுக்காமல் வருத்தினவர்க்கு ஒருநாள் இன்பமே; பொறுத்தவர்க்கு உலகம் அழியும் வரைக்கும் புகழ் உண்டு.

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**94. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஊக்கமுடைமை

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை

நில்லாது நீங்கி விடும்.

**பொருள்:**

ஒருவர்க்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும், மற்றப் பொருளுடைமையானது நிலைபேறு இல்லாமல் நீங்கிவிடுவதாகும்.

**95. விடை: C**

**விளக்கம்:**

- "காக்கை குருவி எங்கள் ஜாதி" - பாரதியார்
- யாதும் ஊரே ; யாவரும் கேளிர்;
  தீதும் நன்றும் பிறர்தர வாரா; - கணியன் பூங்குன்றனார்

**96. விடை: B**

**விளக்கம்:**

**எடுத்துக்காட்டு உவமையணி**

எடுத்துக்காட்டு உவமையணி என்பது உவமையும் உவமேயமும் தனித்தனித் தொடர்களாக வந்து உவம உருபு மறைந்து வருவது.

**அதிகாரம்:** விருந்தோம்பல்

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குநழ்யும் விருந்து.

**பொருள்:**

அனிச்சப்பூ முகர்ந்தவுடன் வாடிவிடும்: அதுபோல் முகம் மலராமல் வேறுபட்டு நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பர்.

**97. விடை: D**

**விளக்கம்:**

பிற ஆய்வாளர்கள்

- பேராசிரியர்கள் பாப், ராஸ்க், கிரிம்
- பிரான்சிஸ் எல்லிஸ
- ஹோக்கன்
- கால்டுவெல்

**98. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அறன் வலியுறுத்தல்

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

**பொருள்:**

உள்ளத்தில் குற்றம் இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும். மற்றவை எல்லாம் வெறும் ஆரவாரமே.

**99. விடை: C**

**விளக்கம்:**

- "ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின் இலங்குகதிர் விழூடுஉம் நலங்கெழு மணிகளும்" - கனிமவியல் அறிவு - சிலப்பதிகாரம்
- "செம்புலப் பெயல் நீர் போல" - மண்ணியல் அறிவு - குறுந்தொகை
- "அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்" - விண்ணியல் அறிவு- திருவாசகம்

**100. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஈகை

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

**பொருள்:**

தான் பெற்ற உணவைப் பலரோடும் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவனைப் பசி என்று கூறப்படும் தீயநோய் அணுகுதல் இல்லை.

**101. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பெரியாரைத் துணைக்கோடல்

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

**பொருள்:** வந்துள்ள துன்பத்தை நீக்கி, இனித் துன்பம் வராதபடி முன்னதாகவே காக்கவல்ல தன்மையுடையவரைப் போற்றி நட்புக் கொள்ள வேண்டும்.

**102. விடை: A**

**விளக்கம்:**

| | |
|---|---|
| திருக்குறள் | திருவள்ளுவர் |
| நாலடியார் | சமண முனிவர்கள் |
| நான்மணிக்கடிகை | விளம்பி நாகனார் |
| இன்னா நாற்பது | கபிலர் |
| இனியவை நாற்பது | பூதஞ்சேந்தனார் |
| திரிகடுகம் | நல்லாதனார் |
| ஏலாதி | கணிமேதாவியார் |
| பழமொழி நானூறு | முன்றுரை அரையனார் |
| சிறுபஞ்சமூலம் | காரியாசான் |
| ஆசாரக்கோவை | பெருவாயின் முள்ளியார் |
| முதுமொழிக்காஞ்சி | கூடலூர்க்கிழார் |

**103. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** வினைசெயல் வகை

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

**பொருள்:** செயலை முடிக்கும் வகையும், வரக்கூடிய இடையூறும், முடிந்த போது கிடைக்கும் பெரும்பயனும் ஆகியவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

**104. விடை: A**

**105. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அவையஞ்சாமை

பகையத்துச் சாவார் எளியர் அரியர்

அவையகத்து அஞ்சா தவர்

**பொருள்:**

பகைவர் உள்ள போர்க்களத்தில் (அஞ்சாமல் சென்று) சாகத் துணிந்தவர் உலகத்தில் பலர், கற்றவரின் அவைக்களத்தில் பேச வல்லவர் சிலரே.

**106. விடை: C**

**விளக்கம்:**

- ஞானமாலிகா நூலின் ஆசிரியர் கண்ணதாசன்.
- கி.வா.ஜகந்நாதன் நூல்கள்: அன்பின் உருவம், அதிகமான் நெடுமான் அஞ்சி, அழியா அழகு,நாடோடி இலக்கியம், கஞ்சியிலும் இன்பம், குழந்தை உலகம், மச்சு வீடு, மலையருளவி.

**107. விடை: C**

**108. விடை: B**

**விளக்கம்:**

- தேம்பாவணி கி.பி. 1726-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பலத்த எதிர்ப்புகளுக்கிடையில் அரங்கேற்றப்பட்டது.
- தேம்பாவணி மூன்று காண்டங்களைக் கொண்டது. ஒவ்வொன்றிலும் 12 படலமாக 36 படலங்கள் உள்ளன. மொத்தம் 3,615 விருத்தப் பாக்கள் 90 சந்த வகைகளுடன் பாடப் பெற்றது தேம்பாவணி.

**109. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கண்ணோட்டம்

கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்

கண்ணோட்டம் இன்மையும் இல்.

**பொருள்:**

கண்ணோட்டம் இல்லாத மக்கள் கண் இல்லாதவரே ஆவர், கண் உடைய மக்கள் கண்ணோட்டம் இல்லாதிருத்தலும் இல்லை.

**110. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அன்புடைமை

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

**பொருள்:**

உலகத்தில் இன்பம் உற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்கையின் பயன் என்று கூறுவர்.

**111. விடை: B**

**விளக்கம்:**

- பாவலரேறு பெருஞ்சித்திரனார் 1959-ல், ‘தென்மொழி’ என்ற இதழைத் தேவநேயப் பாவாணருடன் இணைந்து தொடங்கினார்.
- தென்மொழி இதழின் வழியாகத் தமிழகம் முழுவதும் தனித்தமிழ் உணர்வைப் பரப்பிய பெருஞ்சித்திரனார் 1972 இல் திருச்சிராப்பள்ளியில் ‘தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாட்டை’ நடத்தினார்.

**112. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்வி

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

**பொருள்:**

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக் கல்வியையே) விரும்புவர்

**113. விடை: B**

**114. விடை: C**

**விளக்கம்:**

- ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்கள் வட்டார மொழி எனப்படுகிறது.
- ஒரு மொழியைப் பேசுபவர்களுக்கு இடையே வேறுபட்டுக் காணப்படும் பேச்சுவழக்கையே மொழியியலார் கிளை மொழி என்று கூறுகின்றனர்.
- கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய திராவிட மொழிகள் தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகள் ஆகும்.

**115. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நடுவுநிலைமை

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு

**பொருள்:** நடுவுநிலைமை நின்று அறநெறியில் நிலைத்து வாழகின்றவன் அடைந்த வறுமை நிலையைக் கேடு என கொள்ளாது உலகு.

**116. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கூடா ஒழுக்கம்

கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல்.

**பொருள்:** நேராகத் தோன்றினும் அம்பு கொடியது; வளைவுடன் தோன்றினாலும் யாழின் கொம்பு நன்மையானது. மக்களின் பண்புகளையும் செயல்வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும்.

**117. விடை: A**

**விளக்கம்:**

- அரும்பொருள் விளக்க நிகண்டு - அருமருந்தைய தேசிகர்
- கைலாச நிகண்டு - கைலாசர்

**118. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்லாமை

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

**பொருள்:** கல்லாதவன் ஒருவன் தன்னைத்தான் மகிழ்ந்து பேசும் மதிப்பு (கற்றவரிடம்) கூடிப்பேசும் போது அப்பேச்சினால் கெடும்.

**119. விடை: A**

**விளக்கம்:** ‘தமிழ்த்தேசியத்தின் தந்தை’ என்று அழைக்கப்படுபவர் பெருஞ்சித்திரனார்.

**120. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** செங்கோன்மை

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

**பொருள்:** ஒருவனுக்கு வெற்றி பெற்றுத் தருவது வேல் அன்று, அரசனுடைய செங்கோலே ஆகும், அச் செங்கோலும் கோணாதிருக்குமாயின்.

**121. விடை: B**

**விளக்கம்:**

- அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் - வடமொழியை ஆராய்ந்து மற்ற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது வடமொழி என முதன்முதலில் குறிப்பிட்டார்.
- பிரான்சிஸ் எல்லிஸ் - தமிழ், தெலுங்கு. கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார்.

**122. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பண்புடைமை

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

**பொருள்:** நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

**123. விடை: B**

**விளக்கம்:** திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகிய நூல்கள் மருந்துப் பெயர்களால் அமைந்தவை.

**124. விடை: A**

**விளக்கம்:**

- கண்ணதாசனின் முதல் திரையிசைப் பாடல் கலங்காதிருமனமே.
- கண்ணதாசனின் இறுதித் திரையிசைப் பாடல் கண்ணே கலைமானே.
- கண்ணதாசன் தலைசிறந்த பாடலாசிரியருக்கான மத்திய அரசின் தேசிய விருதினை 1969-ஆம் ஆண்டு பெற்றார்.

**125. விடை: C**

**விளக்கம்:**

- சி. இலக்குவனார் - திருத்துறைப்பூண்டி (நாகை மாவட்டம்)
- பாவலரேறு பெருஞ்சித்திரனார் - சமுத்திரம் (சேலம் மாவட்டம்)
- உ.வே. சா - உத்தமதானபுரம் (திருவாரூர் மாவட்டம்)

**126. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நட்பு ஆராய்தல்

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளஞ் சுடும்.

**பொருள்:** கேடு வரும் காலத்தில் கைவிட்டு ஒதுங்குகின்றவரின் நட்பு, எமன் கொல்லும் காலத்தில் நினைத்தாலும் நினைத்த உள்ளத்தை வருத்தும்.

**127. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** புறங்கூறாமை

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க

முன்னின்று பின்நோக்காச் சொல்.

**பொருள்:**

எதிரே நின்று கண்ணோட்டம் இல்லாமல் கடுமையாகச் சொன்னாலும் சொல்லலாம்; நேரில் இல்லாதபோது பின் விளைவை ஆராயாத சொல்லைச் சொல்லக்கூடாது.

**128. விடை: C**

**129. விடை: B**

**விளக்கம்:**

முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன

**130. விடை: D**

**விளக்கம்:**

- தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் செப்பேடுகளிலும் காணமுடிகிறது.
- கல்வெட்டுகள் கி.மு. (பொ.ஆ.மு.) மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.
- செப்பேடுகள் கி.பி. (பொ.ஆ.) ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.
- கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.

**131. விடை: D**

**132. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஒழுக்கமுடைமை

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்

ஏதம் படுபாக்கு அறிந்து

**பொருள்:**

ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாவதை அறிந்து, மனவலிமை உடைய சான்றோர் ஒழுக்கத்தில் தவறாமல் காத்துக் கொள்வர்.

**133. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பொறையுடைமை

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

**பொருள்:**

வறுமையுள் வறுமை, விருந்தினரைப் போற்றாமல் நீக்குதல்; வல்லமையுள் வல்லமை என்பது அறிவிலார் தீங்கு செய்தலைப் பொறுத்தலாகும்.

**134. விடை: D**

**135. விடை: D**

**விளக்கம்:**

- கண்ணதாசன் எழுதிய முதல் காவியம் மாங்கனி.
- கண்ணதாசன் கதை வசனம் எழுதிய திரைப்படம் இல்லற ஜோதி.
- கண்ணதாசன் எழுதிய இறுதிக் காவியம் இயேசு காவியம்.
- கண்ணதாசனுக்குச் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

**136. விடை: D**

**விளக்கம்:**

**தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் சிறப்பு**

- “இவரைப் போல இன்னொரு மகன் எனக்குக் கிடைப்பானா” எனத் தமிழே ஏங்குமளவிற்கு ஆழ்ந்த அறிவும் புலமையும் பெற்றுத் தன் பணிகளால் தமிழுக்குப் பெருமையும் புகழையும் ஈட்டித்தந்தவர்
- ‘பன்மொழிப் புலவர்’, ‘பல்கலைச் செல்வர்’, ‘நடமாடும் பல்கலைக்கழகம்’, 'பெருந்தமிழ்மணி', 'குருதேவர்', 'பத்மபூஷண்', 'கலைமாமணி' முதலான பல்வேறு சிறப்புப் பெயர்களாலும் பட்டங்களாலும் சிறப்பிக்கப்பட்டவர்.

**137. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஊக்கமுடைமை

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னுஞ் செருக்கு.

**பொருள்:**

ஊக்கம் இல்லாதவர் இவ்வுலகில் யாம் வண்மை உடையேம் என்றுத் தம்மைத் தான் எண்ணி மகிழும் மகிழ்ச்சியை அடையமாடடார்.

**138. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** விருந்தோம்பல்

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

**பொருள்:**

விருந்தினராக வந்தவர் வீட்டின் புறத்தே இருக்கத் தான் மட்டும் உண்பது சாவாமருந்தாகிய அமிழ்தமே ஆனாலும் அது விரும்பத்தக்கது அன்று.

**139. விடை: A**

**140. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அறன் வலியுறுத்தல்

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

**பொருள்:**

ஒருவன் அறம் செய்யத் தவறிய நாள் ஏற்படாதவாறு அறத்தைச் செய்வானானால் அதுவே அவன் உடலோடு வாழும் நாள் வரும் பிறவி வழியை அடைக்கும் கல்லாகும்.

**141. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஈகை

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள.

**பொருள்:**

யான் வறியவன் என்னும் துன்பச் சொல்லை ஒருவன் உரைப்பதற்கு முன் அவனுக்கு கொடுக்கும் தன்மை, நல்ல குடி பிறப்பு உடையவனிடம் உண்டு.

**142. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பெரியாரைத் துணைக்கோடல்

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

**பொருள்:**

கடிந்து அறிவுரைக் கூறும் பெரியாரின் துணை இல்லாத காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் கெடுவான்.

**143. விடை: B**

**விளக்கம்:**

- தமிழில் பழங்காலம் முதலே பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே வேறுபாடு இருந்துள்ளது.
- தொல்காப்பியர் இவற்றை உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்று கூறியுள்ளார்.

**144. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** வினைசெயல் வகை

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.

**பொருள்:** செய்யத்தொடங்கியச் செயல், கொண்ட பகை என்று இவ்விரண்டின் குறை ஆராய்ந்து பார்த்தால், தீயின் குறைபோல் தெரியாமல் வளர்ந்து கெடுக்கும்.

**145. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அவை அஞ்சாமை

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.

**பொருள்:** நல்ல அறிஞரின் அவையில் நல்லப் பொருளைக் கேட்பவர் மனதில் பதியுமாறு சொல்ல முடியாதவர், பல நூல்களைக் கற்றாலும் பயன் இல்லாதவரே.

**146. விடை: C**

**147. விடை: D**

**விளக்கம்:**

- கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா.
- கண்ணதாசனின் ஊர் இராமநாதபுரம் மாவட்டம் சிறுகூடல்பட்டி.
- கண்ணதாசனின் பெற்றோர் சாத்தப்பன், விசாலாட்சி.

**148. விடை: B**

**விளக்கம்:**

**அணி விளக்கம்:** ஒரு பாடலில் உவமையும் உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்

**அதிகாரம்:** கண்ணோட்டம்

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.

**பொருள்:** கண்ணோட்டதிற்கு உரிய கண்ணோடு பொருந்தி இருந்தும் கண்ணோட்டம் இல்லாதவர் (கண் இருந்தும் காணாத) மரத்தினைப் போன்றவர்.

**149. விடை: C**

**விளக்கம்:**

அன்பகத்தில்லா - உயிர்வாழ்க்கை

**150. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்வி

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

**பொருள்:**

செல்வர் முன் வறியவர் நிற்பது போல் (கற்றவர்முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்விக் கற்றவரே உயர்ந்தவர், கல்லாதவர் இழிந்தவர்.

**151. விடை: A**

**விளக்கம்:**

- இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 1300க்கும் மேற்பட்டவை.
- இவற்றை நான்கு மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கின்றனர்.
- அவை,
    - இந்தோ-ஆரிய மொழிகள்
    - திராவிட மொழிகள்
    - ஆஸ்திரோ ஆசிய மொழிகள்
    - சீன-திபெத்திய மொழிகள்
- இந்தியாவில் இந்தோ-ஆரிய மொழிகள் 78.05% மக்களாலும் திராவிட மொழிகள் 19.64% மக்களாலும் பேசப்படுகின்றன.

**152. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நடுவுநிலைமை

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

**பொருள்:**

தன் நெஞ்சம் நடுவுநிலை நீங்கித் தவறு செய்ய நினைக்குமாயின், நான் கெடப்போகின்றேன் என்று ஒருவன் அறிய வேண்டும்.

**153. விடை: C**

**154. விடை: C**

**விளக்கம்:**

பெருஞ்சித்திரனார் எழுதிய நூல்கள்

1. அறுபருவத்திருக்கூத்து
2. உலகியல் நூறு
3. எண்சுவை எண்பது
4. கொய்யாக்கனி
5. பாவியக்கொத்து
6. மகபுகுவஞ்சி
7. திருக்குறள் மெய்ப்பொருளுரை
8. நூறாசிரியம்
9. பள்ளிப்பறவைகள்
10. கனிச்சாறு
11. ஐயை
12. இளமை விடியல்
13. அருளி
14. வேண்டும் விடுதலை

**155. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்லாமை

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று.

**பொருள்:**

நுட்பமானதாய் மாட்சியுடையதாய் ஆராய வல்ல அறிவு இல்லாதவனுடைய எழுச்சியான அழகு, மண்ணால் சிறப்பாகப் புனையப்பட்ட பாவை போன்றது.

**156. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** செங்கோன்மை

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

**பொருள்:**

குடிகளைப் பிறர் வருந்தாமல் காத்து, தானும் வருந்தாமல் காப்பாற்றி, அவற்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல், அரசனுடைய தொழில் பழி அன்று.

**157. விடை: D**

**விளக்கம்:**

“கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும் மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும் கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை பத்தே சிறப்பத் தொழிற்குஉறுப் பாவன” - திவாகர நிகண்டு

**158. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பண்புடைமை

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்

மண்புக்கு மாய்வது மன்.

**பொருள்:**

பண்பு உடையவரிடத்தில் பொருந்தியிருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகின்றது, அஃது இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்து போகும்

**159. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நட்பு ஆராய்தல்

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை

தான்சாம் துயரம் தரும்.

**பொருள்:**

ஆராய்ந்து ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவனுடைய நட்பு, இறுதியில் தான் சாவதற்குக் காரணமான துயரத்தை உண்டாக்கிவிடும்.

**160. விடை: A**

**விளக்கம்:**

- கண்ணதாசன் சிறப்புப்பெயர்கள் கவியரசு, கவிச்சக்ரவர்த்தி, குழந்தை மனம் கொண்ட கவிஞர்.
- கண்ணதாசனின் புனைபெயர் ஆரோக்கியசாமி.

**161. விடை: D**

**162. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அருளுடைமை

மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப

தன்னுயிர் அஞ்சும் வினை.

**பொருள்:**

தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற தீவினை, உலகில் நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களைப் போற்றி அருளுடையவனாக இருப்பவனுக்கு இல்லை.

**163. விடை: B**

**விளக்கம்:**

| | | | |
|---|---|---|---|
| 1966 | தமிழக அரசின் பரிசு பெற்ற நூல் | பூங்கொடி | முடியரசன் |
| 2024 | சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல் | திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சியும் 1908 | ஆ.இரா.வேங்கடாசலபதி |
| 1955 | சாகித்ய அகாதமி விருது பெற்ற முதல் தமிழ் நூல் | தமிழின்பம் | ரா.பி. சேதுப்பிள்ளை |
| 1967 | சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல் | வீரர் உலகம் | கி. வா. ஜகன்னாதன் |

**164. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

**பொருள்:** நல்லொழுக்கம் உடையோரால் தவறியும் தம் வாயால் தீமைதரும் சொற்களைச் சொல்ல இயலாது.

**165. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பொறையுடைமை

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

**பொருள்:**

தீங்கு செய்தவரைப் பொறுக்காமல் வருத்தினவரை உலகத்தார் ஒரு பொருளாக மதியார்; ஆனால், பொறுத்தவரைப் பொன்போல் மனத்துள் வைத்து மதிப்பர்.

**166. விடை: D**

**167. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஊக்கமுடைமை

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை.

**பொருள்:** சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழி கேட்டுக்கொண்டு போய்ச் சேரும்.

**168. விடை: D**

**169. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** விருந்தோம்பல்

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

**பொருள்:**

விருந்தினரை முன்னே போற்றி உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ?

**170. விடை: B**

**விளக்கம் :**

**அதிகாரம்:** அறன் வலியுறுத்தல்

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

**பொருள்:**

இளைஞராக உள்ளவர், பிற்காலத்தில் பார்த்து கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்ய வேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியா துணையாகும்.

**171. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஈகை

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

**பொருள்:**

வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும் அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப் பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்

**172. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பெரியாரைத் துணைக்கோடல்

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

**பொருள்:**

பெரியாரைப் போற்றி தமக்குச் சுற்றத்தாராக்கிக் கொள்ளுதல், பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அருமையானதாகும்.

**173. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அவை அஞ்சாமை

உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்

கற்ற செலச்சொல்லா தார்.

**பொருள்:**

அவைக்களத்திற்கு அஞ்சித் தாம் கற்றவைகளைப் (கேட்பவர் மனத்தில்) பதியுமாறு சொல்ல முடியாதவர், உயிரோடு வாழ்ந்தலும் இறந்தவர்க்கு ஒப்பாவர்.

**174. விடை: C**

**விளக்கம்:**

| | |
|---|---|
| ஆசிரியப்பா | அகவலோசை |
| வெண்பா | செப்பலோசை |
| கலிப்பா | துள்ளலோசை |
| வஞ்சிப்பா | தூங்கலோசை |

**175. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கண்ணோட்டம்

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்

புண்ணென்று உணரப் படும்.

**பொருள்:**

ஒருவனுடைய கண்ணுக்கு அணிகலமாவது கண்ணோட்டம் என்னும் பண்பே, அஃது இல்லையானால் புண் என்று உணரப்படும்.

**176. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அன்புடைமை

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்

வற்றல் மரந்தளிர்த் தற்று.

**பொருள்:**

அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர் வாழ்க்கை வளமற்ற பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற் போன்றது.

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**177. விடை: A**

**விளக்கம்:**

களமர் பலரானும் கள்ளம் படினும்,

வளம்மிக்கார் செல்வம் வருந்தா - விளைநெல்

அரிநர் அணைதிறக்கும் ஊர அறுமோ

நரிநக்கிற் றென்று கடல் - பழமொழி நானூறு

**பொருள்:**

வயல் தொழிலாளர் பலர் விளைச்சலைத் திருடிச் சென்றாலும், வளம் மிக்கவர் செல்வம் அழிவதில்லை.விளைந்த நெல்லை அறுக்கும் பொருட்டு வயலில் உள்ள வரப்பு அணையைத் திறந்துவிடும் நெல்வளம் மிக்க ஊரை உடைய வேந்தனே! கடலை நரி நீர் அருந்த நக்கிற்று என்று கடல் வற்றிப் போகுமா?

**178. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நடுவுநிலைமை

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்

கோடாமை சான்றோர்க்கு அணி

**பொருள்:**

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

VETRII I.A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011

**179. விடை: A**

**விளக்கம்:**

- உவே.சா-வின் சிறப்புப் பெயர்: தமிழ்த்தாத்தா, கும்பமுனி.
- சடகோப ஐயங்கார் மற்றும் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியோரிடம் விடாமுயற்சியுடன் தமிழ் கற்றுத் தமிழறிஞரானார் உ வே. சா.

**180. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கூடா ஒழுக்கம்

நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து

வாழ்வாரின் வன்கணார் இல்.

**பொருள்:**

மனத்தில் பற்றுக்களைத் துறக்காமல் துறந்தவரைப் போல் வஞ்சனைச் செய்து வாழ்கின்றவரைப் போல் இரக்கமற்றவர் எவரும் இல்லை.

**181. விடை: A**

**182. விடை: C**

**விளக்கம்:**

**உ. வே. சா- பற்றி**

- "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று கூறினார் காந்தியடிகள்.
- ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்து உ. வே. சா.
- தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாப்பாக பராமரிக்கப்படுகின்றன.

**183. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** செங்கோன்மை

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

**பொருள்:**

அந்தணர் போற்றும் மறைநூலுக்கும் அறத்திற்கும் அடிப்படையாய் நின்று உலகத்தைக் காப்பது அரசனுடைய செங்கோலாகும்.

**184. விடை: C**

**விளக்கம்:**

**எடுத்துக்காட்டு உவமையணி**

உவமையும் உவமேயமும் தனித்தனித் தொடர்களாக வந்து அவ்விரண்டையும் கூட்டுவிக்கின்ற இடைச்சொல்லான உவம உருபு இவ்விரு தொடர்களின் இடையே வெளிப்படாமல் மறைந்து நின்று பொருள் தருமானால் அஃது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

**அதிகாரம்:** நட்பு ஆராய்தல்

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

**பொருள்:**

ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணாமலிருக்க வேண்டும், அதுபோல் துன்பம் வந்த போது கைவிடுகின்றவரின் நட்பைக் கொள்ளாதிருக்க வேண்டும்.

**185. விடை: D**

**விளக்கம்:**

பிற அகராதி வகைகள்

- மேற்கோள் அகராதிகள்
- ஒலிக்குறிப்பு, ஒலிப்பு அகராதிகள்
- வணிகச் சொல், கணினிச் சொல், மருத்துவச் சொல், அலுவலகப் பயன்பாட்டுச் சொல் ஆட்சிமொழி அகராதிகள்
- இணைய அகராதிகள்
- பொறியியல், தத்துவம், சமயக் கருத்து, இலக்கியவியல், அயற்சொல் அகராதிகள்

**186. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** புறங்கூறாமை

அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

**பொருள்:** அறத்தை நல்லதென்று போற்றும் நெஞ்சம் இல்லாததன்மை, ஒருவன் மற்றவனைப் பற்றிப் புறங்கூறுகின்ற சிறுமையால் காணப்படும்

**187. விடை: C**

**விளக்கம்:**

**உவமையணி**

ஒரு பாடலில் உவமையும் உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.

**அதிகாரம்:** அருளுடைமை

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

**பொருள்:** பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாதவாறு போல உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லையாம்.

**188. விடை: B**

**189. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஒழுக்கமுடைமை

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு

**பொருள்:** பொறாமை உடையவனிடத்தில் ஆக்கம் இல்லாதவாறு போல, ஒழுக்கம் இல்லாதவனுடைய வாழ்க்கையில் உயர்வு இல்லையாகும்.

**190. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பொறையுடைமை

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

**பொருள்:** தீங்கு செய்தவரைப் பொறுக்காமல் வருத்தினவரை உலகத்தார் ஒரு பொருளாக மதியார்; ஆனால், பொறுத்தவரைப் பொன்போல் மனத்துள் வைத்து மதிப்பர்.

**191. விடை: D**

**192. விடை: D**

**விளக்கம்:**

**எடுத்துக்காட்டு உவமையணி**

எடுத்துக்காட்டு உவமையணி என்பது உவமையும் உவமேயமும் தனித்தனித் தொடர்களாக வந்து உவம உருபு மறைந்து வருவது.

**அதிகாரம்:** ஊக்கமுடைமை

சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு

**பொருள்:** உடம்பை மறைக்குமளவு அம்புகளால் புண்பட்டும் யானைத் தன் பெருமையை நிலைநிறுத்தும், அதுபோல் ஊக்கம் உடையவர் அழிவு வந்தவிடத்திலும் தளர மாட்டார்.

**193. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஒழுக்கமுடைமை

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

**பொருள்:** உலகத்து உயர்ந்தவரோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவரே ஆவர்.

**194. விடை: A**

**விளக்கம்:**

- 2014 ஆம் ஆண்டு முதல் ஜி. யு. போப் விருது வழங்கப்படுகிறது.
- அயல்நாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்கும் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்பாளருக்கு ஜி.யு.போப் விருது வழங்கப்பெற்று வருகிறது

| வ. எண் | விருது பெற்றவர்கள் | ஆண்டு |
|---|---|---|
| 1. | ஜெ.நாராயணசாமி | 2014 |
| 2. | மதுரை இளங்கவின் | 2015 |
| 3. | முனைவர் அமுதன் அடிகள் | 2022 |
| 4. | வெ.முருகன் | 2023 |

**195. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அறன் வலியுறுத்தல்

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

**பொருள்:** பல்லக்கைச் சுமப்பவனும் அதன்மேலிருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூறவேண்டா.

**196. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஈகை

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

**பொருள்:** தவ வலிமை உடையவரின் வலிமை பசியை பொறுத்துக் கொள்ளலாகும், அதுவும் அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதாகும்.

**197. விடை: A**

**198. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பெரியாரைத் துணைக்கோடல்

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை

**பொருள்:** தம்மைவிட (அறிவு முதலியவற்றால்) பெரியவர் தமக்குச் சுற்றத்தராகுமாறு நடத்தல், வல்லமை எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

**199. விடை: B**

**விளக்கம்:** ஒரு பெயர்ச்சொல்லையோ அல்லது வினைச்சொல்லையோ சிறப்பிப்பதற்காக (அடையாக) அவற்றுக்கு முன்னால் உரிச்சொல் சேர்ந்து வருவது உரிச்சொல் தொடர் எனப்படும். சான்று: மாநகர், சாலப் பேசினான், உறுபொருள்.

**200. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அருளுடைமை

பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது.

**பொருள்:** பொருள் இல்லாதவர் ஒரு காலத்தில் வளம் பெற்று விளங்குவர், அருள் இல்லாதவர் வாழ்க்கையின் பயம் அற்றவரே அவர் ஒரு காலத்திலும் சிறந்து விளங்குதல் இல்லை.